**காற்று மின்சக்தி உருவாக்கல் செயற்திட்டம்- 2018**

---

காற்று மின்சகதி உருவாக்கல் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிகூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை இலங்கை மின்சார சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் 2017 நவம்பர் 22 ஆம் திகதிய கைச்சாத்திடப்பட்ட செயற்திட்ட நிர்வாக கைநூலின் ஏ(ஈ) ஆம் பிரிவு மற்றும் 3585- எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.02 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
சீஎல்கே

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

---

செயற்திட்டக் கடன் உடனபடிக்கைகளின் பிரகாரம் இலங்கை மின்சாரசபை செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. இலங்கையில் சுத்தமான மின்சக்தி உருவாக்கல் அதிகரிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 39,923.06 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 256.70 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 31,104.84 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 8,818.22 மில்லியன் இலங்கை மின்சார சபையால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2018 சனவரி 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்க ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.1. **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | சுவீகரிப்பிற்கான காணித் துண்டுகளின் நியதிக் கொடுப்பனவுகள் மீசெய்யப்பட்ட முற்பணங்கள் நடைபெறும் வெலையின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 4.55 | நடைபெறும் வேலைகளின் பெறுமதி அதிகரித்தக் கூறல் மற்றும் அதே தொகையால் ஏனைய கடன்பட்டோரின் மீதியின் குறைத்தக்கூறல் | ஏற்றுக்கொள்ளப்பட்ட திருத்தம் செய்ய வெண்டும். | கணக்குகளை திருத்துவதற்கான தேவை |

3. **பௌதீக செயலாற்றல்**

3.1 **செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்**

செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் காற்று மின்சக்தி உருவாக்கல் இயலளவை அதிகரித்தல், முறைமையை மீளசெயற்படுத்தல் மின்சக்தி முகாமைத்துவம் மற்றும் செயற்திட்ட பொறியியல் வடிவமைப்பு மீளாய்வு மற்றும்மேற்பார்வை என்பவற்றின் கடன்பெறல் இயலளவு 3 கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றன. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், காற்று மின்சக்தி உருவாக்கலின் கீழான நடவடிக்கைகள் இலங்கை மின்சார சபையின் பரிமாற்றல் பிரிவால் 2013 இல் தொடங்கப்பட்டு அமுலாக்கப்படுகின்றன. உரிய நடவடிக்கைகள' மீளாய்வாண்டின் போது இலங்கை மின்சார சபையின் செயற்திட்ட அமுலாக்கல் பிரிவிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 வரை இலங்கை மின்சார சபையால் ரூபா 307.86 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தது. செயற்திட்ட நிர்வாக கைநூலின் பிரகாரம், 2018 யூன் 31 அளவில் தொடங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட காற்று மின்சக்தி உருவாக்ல் நடவடிக்கைகள் கொள்வனவு நடைமுறையிலுள்ள தாமதங்கள் காரணமாக 2019 மார்ச் 25 இல் தொடஙகப்பட்டிருந்தது. ஆகவெ, கடனளிக்கும் முகவரால் செய்யப்பட்ட ரூபா 5,000 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 32.25 மில்லியன் ஒதுக்கீடு மற்றும் இலங்கை மின்சார சபையால் செய்யப்பட்ட ரூபா 239.63 மில்லியன் தொகையான பங்களிப்புகள் என்பவற்றில் முறையே ரூபா 2,373 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 13 மில்லியன் மற்றுரூபா 482.64 மில்லியன் மாத்திரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது.

**3.2 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட விடயங்கள்**

| பதவியணி நிலை | அனுமதிக்கப்பட்ட பதவயிணி | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|---|
| | | உள்ளபடியானது | வெற்றிடங்களின் எண்ணிக்கை | | | |
| செயற்திட்ட பணிப்பாளர் | 1 | 0 | 1 | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் முறைப்படி ஒருங்கிணைக்கப்பட்டு அமுலாக்கபபட்டு கண்காணிக்கப் படவில்லை | வெற்றிடங்களை நிரப்புவதற்கு வேண்டுகை செய்யப்பட்டது | பதவியணி தேவை முறைப்படி இனங்காணப்பட வேண்டியதுடன் முக்கியமான வெற்றிடங்களை நிரப்பவதற்கு உடனடி நடவடிக்கை எடுககப்பட வேண்டும். |
| மின்சார பொறியியலாளர் | 4 | 3 | 1 | | | |
| கணக்காளர் | 1 | 0 | 1 | | | |
| மின்னியல் அத்தியட்சகர் | 8 | 3 | 5 | | | |
| சிவில் அத்தியட்சகர் | 4 | 2 | 2 | | | |
| இயந்திரவியல் அத்தியட்சகர் | 3 | 1 | 2 | | | |

**3.3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

| | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1978 திசெம்பர் 31 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு செயற்திட்டத்தின் நிலையான சொத்துப் பதிவேட்டினை முறைப்படி பேணியிருக்கவில்லை. | நிலையான சொத்தக்களின் பௌதீக மெய்மையாய்வு செய்யப்படவில்லை | 2019 இல் பௌதீக மெய்மையாய்வின் பின்னர் செயற்திட்டத்தால் நிலையான சொத்தப் பதிவேடு பேணப்படும். | முறையான வழியில் நிலையான சொத்தப் பதிவேடு பேணப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட நிர்வாக கைநூலின் V சீ(31) ஆம் பிரிவின் பிரகாரம் செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்கு இலங்கை மின்சார சபையால் புறம்பான பெரேடு பேணப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டப் பிரிவின் காசுப் புத்தகம் புறம்பாக பெணப்படவதற்கு பதிலாக செயற்தட்டத்தின் பெறுவனவகள் மற்றும் கொடுப்பனவுகள் பதிவதை பொதுக் காசு புத்தகம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகள் தொடர்பான கொடககல் வாங்கல்கள் தெளிவாக இனங்காண முடியவில்லை. | இந்த செயற்திட்டத்திற்காக புறம்பான வங்கி கைதவிர்ப்பு கணக்கு எதுவும் இல்லை. கொடுக்கல் வாங்கல்கள் இலங்கை மின்சார சபையின் - செயற்திட்ட பிரிவில் காசுப் புத்தகத்தில் பதியப்பட்டன. | செயற்திட்டத்திற்காக புறம்பான கணக்கீட்டு பதிவேட்டுத் தொகுதி பேணப்பட வேண்டும். |
| (இ) | நிதிப்பிரமாணம் 134(3) ஆம் பிரிவில் வெண்டப்பட்டவாறு இலங்கை மின்சாரசபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவு செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் நலிவான கட்டுப்பாடு | கருத்துரைகள் பெறப்படவில்லை | செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளக கணக்காய்வுப் பிரிவு கணக்காய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | ஊழியர்கள் சார்பில் ரூபா 18.91 மில்லியன் உழைக்கும் போது செலுத்தும் வரி (PAYE) செயற்திட்டம் செலுத்தியிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது உரிய ஊழியர்களின் கம்பளங்களிலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிப்பு | அவர்கள் சார்பில் சபையால் செலுத்தப்பட்ட PAYE வரி ஊழியர்களின் பொறுப்பாக உள்ளது | இலங்கை மின்சார சபையிடமிருந்து செலுத்தப்பட்ட PAYE வரிஅறவிடவேண்டிய தேவை |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | நிதி மற்றும் திட்டமிடல் அமைசசின் 2007 ஆகஸ்ட் மாதத்தின் 07 ஆந் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் ஒவ்வொரு நிதியாண்டின் மார்ச் 31 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 10 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பிரதான தேவை நிறைவெற்றப் பட்டிருக்கவில்லை. | கவனத்திற்கொள்ளப்பட்டதுடன் குறித்த திகதிக்கு முன்னர் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிப்பதற்கு எதிர்காலத்தில் கவனத்தில் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | குறித்த திகதிக்கு முன்னர் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் சொத்துக்களின் வருடாந்த மெய்மையாய்வு 2016 இலிருந்து மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக சொத்துக்களின் உள்ளதன்மை மற்றும் பயன்பாடு மெய்மையாய்வு செய்ய முடியவில்லை. | செயற்திட்ட அலுவலகம் மற்றும் வேலைத்தளங்கள் இரண்டிலும் 2019 ஆம் ஆண்டிற்காக சொத்தக்களின் பௌதீக மெய்மையாய்வை மேற்கொள்வதற்கு ஏற்கனவே வடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட வேண்டும். |